# இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்

# தமிழ்த்துறை

# ஆண்டறிக்கை 2015-2016

## கல்லூரி வரலாறு :

பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் காணவும் கல்வி என்னும் ஒளி கொண்டு அறியாமை என்னும் இருளை அகற்றிடவும், பெண்களால் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட கல்லூரி, எம் இதயா மகளிர் கல்லூரி ஆகும். பெண்கள் கல்வி எனும் ஊன்றுகோலைக் கொண்டு காலமெலாம் தன்னம்பிக்கையுடன் வாழ இமாகுலேட் அருட்சகோதரிகளால் கடந்த 2000 ஆவது ஆண்டில் இக்கல்லூரி தொடங்கப்பட்டது. இன்று பல்வேறு இளநிலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர் பாடப் பிரிவுகளுடன் முனைவர் பட்ட வகுப்பும் இணைந்து கல்விப் பணியில் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

பத்துப் பாடப்பிரிவுகள் உள்ள இக்கல்லூரியில் தமிழ்த் துறையானது 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்ப்புலவர்கள் பலரை உருவாக்கிய இத்துறை மென்மேலும் வளர்ந்து 2007 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பும், 2011 ஆம் ஆண்டு பகுதி நேர மற்றும் முழு நேர ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு முனைவர் பட்ட ஆய்வும் தொடங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்துறை மாணவர்களுக்கான பல்வேறு ஆக்கப்பணிகளை செய்து வருகின்றது. அதில் 2015 □ 2016 ஆவது ஆண்டிற்கான தமிழ்த்துறையின் ஆண்டறிக்கையினை உங்கள் முன் வாசிக்கின்றேன்.

## இலக்கிய மன்ற விழாக்கள் :

21.07.2015 அன்று இலக்கிய மன்ற துவக்கவிழா நடைபெற்றது. இதில் சீதை தீக்குளிக்கும் இராமாயணக் காட்சியை மீட்டுருவாக்கம் செய்து நாடகம் நடித்தனர்.

14.08.2015 அன்று இசைப் பயிலரங்கம் நடைபெற்றது.இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக பாளையங்கோட்டை புனித சவேரியார் கலைக்கல்லூரியின்

தமிழ்த்துறைத் தலைவர் அருட்தந்தை முனைவர் பிரிட்டோ வின்சென்ட் அவர்களும், கலையரசு, இசையரசு விருதுபெற்ற திரு பீர் முகம்மது அவர்களும் வருகை புரிந்தனர். நாட்டுப்புற இசையின் பல்வேறு நுணுக்கங்களையும், சமூக விழிப்புணர்வு குறித்த பாடல்களையும் பாடி மாணவிகளுக்குப் பயிற்சியும் வழங்கினார்கள்.






29.03.2016 அன்று இலக்கிய மன்ற நிறைவுவிழா நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சத்யா அவர்கள் கலந்துகொண்டு □**ஊடகமும் இளைய சமுதாயமும்**□ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

# பிற விழாக்கள் :

22.12.2016 அன்று கிறித்துவ பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. தமிழ்த்துறை சார்பாக சிறப்பான முறையில் குடில் அமைக்கப்பட்டது. பகிர்வில் மகிழ்வைக் காணும் விதத்தில் இவ்விழாக் கொண்டாடப்பட்டது.




12.13.1.2016 ஆகிய இரு நாட்கள் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் முத்துலெட்சுமி அவர்கள் கலந்துகொண்டு மாணவிகளை உற்சாகப்படுத்தும் வகையில் சிறப்புரையாற்றினார்.




# ஆசிரியர்கள் கலந்துகொண்ட கருத்தரங்குகள் :

08.08.2015 அன்று பாரத் கலை அறிவியல் கல்லூரியில் பன்முக நோக்கில் திருக்குறள் என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அருட்சகோதரி. லூர்துமேரி, முனைவர் மெ.சிவசங்கரி, முனைவர் க.வாசுகி, முனைவர் ச.சாந்திமதி ஆகியோர் கலந்துகொண்டு கட்டுரை வாசித்தனர்.

22.09.2015 அன்று திருச்சி ஜமால் முகம்மது கல்லாரியில் **தகவல் தொடர்பு சாதனங்களின் வழி சமூக மாற்றம்** என்னும் பொருண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் எம் பேராசிரியர்கள் அருட்சகோதரி மோ.லூர்துமேரி, முனைவர் த.ஹேமலதா, முனைவர் சு.கிருஷ்ணவேணி, முனைவர் ச.சாந்திமதி ஆகியோர் கட்டுரை சமர்ப்பித்தார்கள்.

15.10.2015 அன்று சிவகங்கை இளையான்குடி ஜாகிர் உசேன் கல்லூரியில் அப்துல்கலாம் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் எம் பேராசிரியர் முனைவர் அருட்சகோதரி.மோ.லூர்துமேரி. முனைவர் சா.சாந்திமதி ஆகியோர் கட்டுரைகளை வழங்கினார்கள்.

12.04.2016 அன்று டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாளை முன்னிட்டு காரைக்கால் பண்பலை வானொலி நிலையத்தில் □**அம்பேத்காரின் பெண்ணியச் சிந்தனைகள்**□ என்ற தலைப்பில் முனைவர் க.வாசுகி, முனைவர் சு.கிருஷ்ணவேணி ஆகிய இருவரும் உரையாடல் நிகழ்த்தினார்கள்.

09.07.2016 அன்று பாபநாசம் திருக்குறள் மன்றம் நடத்திய கூட்டத்தில் முனைவர் த.ஹேமலதா □**வள்ளுவமும் வாழ்வியலும்**□ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## மாணவியர் கலந்துகொண்ட போட்டிகள் :

31.07.2015 அன்று வேதாத்ரி மனவளக்கலை மன்றம் சார்பில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பாட்டு மற்றும் பேச்சுப் போட்டிகளில் நம் கல்லூரி சார்பில் 62 மாணவிகள் கலந்துகொண்டனர்.

31.07.2015 அன்று அறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு முரசொலி அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்ட பாரதிதாசன் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் மாணவிகள் பலர் கலந்துகொண்டனர். அதில் வைசாலி என்னும் மாணவி ரூ.500 ஆறுதல் பரிசு பெற்றார்.

11.08.2015 அன்று பாரத் கலை மற்றும் நிர்வாகவியல் கல்லூரியில் நடைபெற்ற எய்ட்ஸ் விழிப்புணர்விற்கான கண்காட்சியில் செஞ்சுருள் சங்க மாணவிகள் வைசாலி மற்றும் ஆன்சி கலந்து கொண்டனர்.

12.08.2015 அன்று தஞ்சை ரயில் நிலையத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான மனிதச் சங்கிலியில் எம் துறை மாணவிகள் 12 பேர் கலந்துகொண்டனர்.

16.09.2015 அன்று அறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்த்துறை சார்பாக மாணவிகளுக்கு கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம், கையெழுத்துப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பல்துறை மாணவிகளும் கலந்துகொண்டனர்.

22.09.2015 அன்று திருச்சி புனித வளனார் கல்லூரியில் நடைபெற்ற இலக்கியம் தொடர்பான கலை நிகழ்ச்சிகளில் எம் துறை மாணவிகள் 10 பேர் கலந்து கொண்டனர். சங்க அகப்புற வாழ்வியலை நாடகமாக நடித்து, அனைவரின் பாராட்டையும் பெற்றனர்.

## மாணவியர் பணி விபரம் :

2011 □ 2014 ல் இளநிலையும் 2014 - 2016ல் முதுகலையும் நம் கல்லூரியில் பயின்ற **ஞா.விசாலி** என்ற மாணவி முதுகலை பயிலும்பொழுதே தமிழ்ப்புலவர் பட்டப் படிப்பும் படித்ததைத் தொடர்ந்து தற்பொழுது மினர்வா பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

## நடப்பாண்டுத்திட்டம் :

2016 -17 ஆம் கல்வியாண்டில் தமிழ்த்துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஒருநாள் கருத்தரங்கம் ஒன்றும், முப்பெரும் விழாவும் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மாணவியரின் தமிழார்வத்தைத் தூண்டும் எண்ணத்துடனும், பணித்தேர்வுகளில் வெற்றி பெறுவதைக் கருத்தில் கொண்டும் தமிழ் மன்றத் தேர்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு :

09.10.2015 அன்று புதுக்கோட்டை ராஜாஸ் கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான கோ □ கோ போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு மாணவி ரா.திவ்யா கலந்து கொண்டு மூன்றாமிடம் பெற்றுள்ளார்.

30.10.2015 அன்று புதுப்பட்டினத்திலுள்ள வெளிவயல் கிராமத்தில் நடந்த கடற்கரை கபாடி போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு மாணவி பா.கனகவள்ளி மற்றும் த.அமலா ஆகியோர் மூன்றாமிடம் பெற்றனர்.

07.10.2015 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான உயரம் தாண்டுதல் போட்டியில் இளநிலை இலக்கியம் முதலாமாண்டு மாணவி த.அமலா மூன்றாமிடம் பெற்றார்.

மாணவிகளின் விளையாட்டுத் திறனை ஊக்கப்படுத்தும் வகையில் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் எம் துறை மாணவியர் கலந்து கொண்டு பல பரிசுகளை தட்டிச் சென்றனர். இதில் முதலாமாண்டு மாணவி த.அமலா உயரம் தாண்டுதலில் முதலிடமும், நீளம் தாண்டுதலில் மூன்றாமிடமும்,

கபாடிப் போட்டியில் முதலிடமும், 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலிடமும் கைப்பந்துப் போட்டியில் இரண்டாமிடமும் பெற்றுள்ளார்.

இரண்டாமாண்டு மாணவி கா.கனகவள்ளி கையுந்துபந்து போட்டியில் இரண்டாமிடமும் , கபாடிப் போட்டியில் முதலிடமும், கைப்பந்து போட்டியில் இரண்டாமிடமும், சங்கிலி குண்டு எறிதலில் மூன்றாமிடமும் பெற்றுள்ளார்.

இரண்டாமாண்டு மாணவி ரா.திவ்யா 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலிடமும், 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இரண்டமிடமும், நீளம் தாண்டுதல், அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகளில் முதலிடமும், கோ கோ, மற்றும் பூப்பந்தாட்டப் போட்டிகளில் இரண்டாமிடமும் பெற்றதோடு அனைத்துப் போட்டிகளுக்கான ஒட்டுமொத்த சாம்பியன் வெற்றிக் கோப்பையையும் பரிசாகப் பெற்றார் என்பதை மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

## பிற துறைசார் வளர்ச்சிப் பணிகள் :

இலக்கியத் துறை மாணவிகளின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் □வெள்ளி வட்டம்□ என்ற நிகழ்வு நடத்தப்படுகின்றது. இவற்றில் மாணவிகளின் எழுத்து மற்றும் பேச்சாற்றலை வளர்க்கும் வகையில் கட்டுரை வாசிப்பு, கவிதை வாசிப்பு, சொற்பொழிவு போன்ற நிகழ்வுகள் நிகழ்த்தப்பெறும். இந்நிகழ்வில் மாணவிகளின் அச்ச உணர்வை நீக்கும் பொருட்டு 04.09.2015 அன்று நிலைமேடை (போடியம்) வாங்கப்பட்டது.

07.09.2015 அன்று முனைவர் பட்ட வகுப்பு தொடங்குவதற்காகவும், முதுகலை பட்ட வகுப்பின் நிரந்தர இசைவு தொடர்பாகவும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலிருந்து ஆய்வுக்குழு வருகை புரிந்தது. ஆய்வுக்குழ உறுப்பினராக திருப்பனந்தாள் கல்லூரியின் நூலகர் முனைவர் செல்வநாயகம் அவர்கள் வருகைபுரிந்து வகுப்பறைகள், நூலகம் போன்றவற்றைப் பார்வையிட்டு முனைவர் பட்ட வகுப்பு தொடங்குவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு முனைவர் பட்ட வகுப்பும் தொடங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.